[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2006 ஆகஸ்ட் 31

தமிழ்நாட்டிலே சிக்-குன்-குன்யா நோய் இல்லையென்று சொல்லக்கூடிய அளவிறகு எங்களுடைய பணிகள் இருக்கும் என்பதை நான் சொல்லிக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

முற்பகல் 10–55

இன்னொரு தகவல். நேற்றையதினம் பத்திரிகையிலே பார்த்திருப்பீர்கள். ஆந்திராவிலே பார்ப்போம் என்று சொன்னால், காட்டுக்குள்ளே இருக்கிற நக்சலைட்டுகளுக்கு எல்லாம் இந்தக் காய்ச்சல் வந்து, அந்த நக்சலைட்கள் எல்லாம் வெளியிலே வந்து வைத்தியம் செய்துகொள்கிறார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, பரவலாக, இந்தியாவிலே ஒரு 4, 5 மாநிலங்கள் இதனாலே பாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய மாநிலத்திலே நம்முடைய அரசாங்கத்தின் அக்கறையின் காரணமாக, முதலமைச்சரின் அக்கறையின் காரணமாக, முடிந்த அளவிற்கு நாம் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம். *(குறுக்கீடுகள்)*

3. விதி 110–ன்கீழ் அறிக்கை

சென்னை, வண்டலூர்–கேளம்பாக்கம் பகுதியில் துணை நகரம் அமைத்தல்–மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்தில் தொடர்ந்து பெருகி வரும் மக்கள்தொகை, போக்குவரத்து நெரிசல் இவற்றின் காரணமாக, குடிநீர், சாலைகள் போன்ற உள்கட்டமைப்பு வசதிகளில் ஏற்பட்டு வரும் பற்றாக்குறை, இவை அனைத்தையும் கருத்தில்கொண்டு சென்னையைச் சுற்றி துணை நகரங்களை, Satellite Cities அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், அதன் தொடர்ச்சியாக, ஆளுநர் உரை, நிதிநிலை அறிக்கை ஆகியவற்றில் அறிவிக்கப்பட்டிருந்தது.

2001ஆம் ஆண்டின் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி சென்னை மாநகரத்தின், Chennai City மக்கள்தொகை 43 இலட்சத்து 43 ஆயிரமாகும். சென்னை பெருநகரத்தின், Chennai Metropolitan மக்கள்தொகை 70 இலட்சத்து 40 ஆயிரமாகும். அடுத்த 20 ஆண்டுகளில் சென்னை மாநகரின் மக்கள்தொகை 58 இலட்சத்து 50 ஆயிரமாகவும், சென்னை

2006 ஆகஸ்ட் 31]. [கலைஞர் மு. கருணாநிதி]

பெருநகரத்தின் மக்கள்தொகை 125 இலட்சத்து 8 ஆயிரமாகவும் உயருமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தில் தற்போது மக்கள்தொகை அடர்த்தி, density of population ஒரு சதுர கிலோ மீட்டருக்கு 28 ஆயிரத்து 125 பேர் என்ற விகிதத்தில் இருக்குமென்று கணக்கிடப்பட்டுள்ளது. உலகில் மிக அதிக மக்கள்தொகை அடர்த்தியுள்ள நகரங்களில் சென்னையும் ஒன்றாகும். மக்கள்தொகை பெருக்கத்தால் உள்கட்டமைப்பு வசதிகளில் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

சென்னை மாநகரத்தில் தற்போது திட்டமிட்ட பணிகளை நிறைவேற்றத் தேவையான இடவசதி இல்லை. இவ்வகைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் ஆய்வு மேற்கொண்டு, வண்டலூர் கேளம்பாக்கம் சாலைக்குத் தென் பகுதியில் பழைய மாமல்லபுரம் சாலைக்கும், எண் 45 தேசிய நெடுஞ்சாலைக்கும் இடையிலுள்ள சுமார் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில், 30 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு இடத்தை உத்தேசமாகத் தேர்வு செய்துள்ளது. உத்தேசமாகத் தேர்வு செய்துள்ள பகுதியில் தற்போது 13 ஆயிரம் குடும்பங்கள் மட்டுமே வாழ்ந்து வருகின்றார்கள். 270 சதுர கிலோ மீட்டரில் அமைந்துள்ள இந்த நிலப்பரப்பு, மாசற்ற, நல்ல சுற்றுப்புறச் சூழலில் அமைந்துள்ளது. இது புதிய நகரமைப்புக்கு உகந்த பகுதியாகும். இப்பகுதியில் பெரும்பாலான நிலங்கள் பயிரிடப்படாமல் தரிசாகவே உள்ளன. உத்தேசிக்கப்பட்டுள்ள நிலங்களைக் கையகப்படுத்தும்போது நீர்வளப் பகுதி, குடியிருப்புப் பகுதி, காடு உள்ள பகுதி ஆகியவற்றை அறவே நீக்கிவிட்டு, தரிசாகவும், புஞ்சையாகவும் உள்ள நிலங்கள் மட்டுமே கையகப்படுத்தப்பட உள்ளன. நிலங்களைக் கையகப்படுத்தும்போது நில உரிமையாளர்களுக்கு நியாயமான market விலை வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் வாழ்ந்து வரும் மக்கள் இடப்பெயர்ச்சி செய்யப்பட மாட்டார்கள். அவர்கள் அந்தந்த இடங்களிலேயே தொடர்ந்து வாழ்ந்து வரலாம். ஏற்கெனவே மக்கள் வாழ்ந்து வருகின்ற பகுதிகள், உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய துணை நகரத்தின் வளர்ச்சியோடு ஒருங்கிணைக்கப்பட்டு, அவர்களுக்குத் தேவையான சாலை வசதி, குடிநீர் வசதி, மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்பு வசதிகளும் மேம்பாடு செய்யப்பட்டு அவர்கள் பயன்பெறும்வகையில் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும். புதிய நகரம் அமையும்போது உருவாகும் வேலைவாய்ப்புக்கு, இப்பகுதியில் ஏற்கெனவே வாழ்ந்து வரும் மக்களுக்கு மட்டுமே, நல்ல பலனை வழங்கி, அவர்கள் பொருளாதார ரீதியாக உயர்வதற்கும் வழி வகுக்கும்.

இந்தத் துணை நகரத் திட்டம் வளர்ந்து வரும் சென்னை பெருநகரத்தின் நெரிசலைப் பெருமளவிற்குக் குறைப்பதோடு, உலகின் ஒரு முக்கிய தொழில் நகரமாகவும், தகவல் தொழில்நுட்ப நகரமாகவும், வளர்ந்து வரும் சென்னையை நோக்கி, மேலும் தொழில் முதலீட்டாளர்களைத் தொடர்ந்து ஈர்த்திடவும், பொதுமக்களுக்குத் தரமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தரவும் பயன்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–00

4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு, 2006

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2006ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழிற்கல்வி நிறுவனங்கள் (மாணவர் சேர்க்கை மற்றும் கட்டணம் நிர்ணயிப்பதை முறைப்படுத்துதல்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு.... (குறுக்கீடுகள்) சேகர்பாபு உட்காருகிறீர்களா? சேகர்பாபு உட்காருகிறீர்களா? (குறுக்கீடுகள்) அடுத்த அலுவல்களுக்கு இடைஞ்சல் பண்ணுகிறீர்கள். உட்காருங்கள் முதலில். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், அனுமதி இல்லை. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பொள்ளாச்சி ஜெயராமன், உட்காருங்கள். நடவடிக்கை எடுப்பேன், முதலில் உட்காருங்கள்.

(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. பொள்ளாச்சி ஜெயராமன், திரு. பி.கே. சேகர்பாபு, திரு. எல். ரவிச்சந்திரன் ஆகியோர் நின்றுகொண்டிருந்தனர்.)

TRUTH ALONE TRIUMPHS